1987 நவம்பர் 10]

கோபி வட்டத்தில் சேமிப்புக் கிடங்கு.

3—(*வினா எண். 13424) திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், கோபி வட்டத்தில் விவசாயிகளின் பொருள்களை சேமித்து வைப்பதற்கு சேமிப்புக் கிடங்கு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம், கோபிச் செட்டி பாளையம் வட்டம், கோபிச் செட்டிபாளையத்தில் ஏற்கனவே தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமும், வேளாண்மை விற்பனை இயக்ககமும் விவசாயிகளின் பொருட்களை சேமித்து வைப்பதற்கு சேமிப்புக் கிடங்குகளை நடத்தி வருகின்றன.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேமிப்புக் கிடங்குகள் வாடகைக் கட்டிடத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பவளமலை என்கின்ற பகுதியில் கோயில் நிலத்திலேயிருந்து புதிதாக அதைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து அரசிற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. மிக விரைவிலேயே அதைக் கட்டி முடிப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே வாடகைக் கட்டிடத்திலே இருக்கின்ற காரணத்தால் குறைந்த அளவிற்குத் தான் விவசாயிகளுடைய சேமிப்புப் பொருட்களை வைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே மிக விரைவிலேயே அரசு அதைப் பரிசீலனை செய்து, இந்த ஆண்டிலேயே அதைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசு முயற்சிக்கும்.